# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஆகஸ்ட் - 2020

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412** **ஒக்டோபர் 14, 2020**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2020 ஆகஸ்ட் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) வெளியிடப்பட்டது. 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2019 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் 9.0% இனால் குறைவடைந்துள்ளது. இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2020 ஆகஸ்ட் மற்றும் 2019 ஆகஸ்ட் மாதங்களில் முறையே 102.1 மற்றும் 112.2 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளை குறிக்கப்பட்ட காலத்தினுள் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

வேறுபட்ட 20 உற்பத்திக் கைத்தொழில் தொகுதிகளில் 8 தொகுதிகளில் உற்பத்தியில் சாதகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது. 2019 ஆகஸ்ட் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2020 ஆகஸ்ட் மாதத்திற்கான, அச்சிடுதலும், மறுபதிவு செய்யப்பட்ட ஊடக உற்பத்தயினதும், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், மற்றும் அடிப்படை மருந்துகள் மற்றும் மருந்து வகை உற்பத்திகள், என்பன முறையே 21.8%, 16.3% மற்றும் 10.8% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஆகஸ்ட் - 2020 | 102.1 |
| ஆகஸ்ட் - 2019 | 112.2 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) -9.0 | |

கைத்தொழில் துறை உற்பத்தியின் 11 கைத்தொழில்களில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது, தோல் மற்றும் அதனோடு தொடர்புடைய தயாரிப்புகள், மரம் மற்றும் மர உற்பத்திகள், மற்றும் ஆடை உற்பத்திகள் முறையே 52.7%, 48.5% மற்றும் 33.0% வீழ்ச்சி பதிவாகியுள்ளது. மேலும், உணவு உற்பத்திக் கைத்தொழில் 2019 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆகஸ்ட் மாதம் 3.5% குறைவடைந்துள்ளது.

2020ஆம் ஆண்டின் ஜுலை மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.